1980 பிப்ரவரி 4]

## சென்னை நகரில் சாலைப் பணிகள்.

*வினா எண் 30—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சியில் 1976 முதல் 1978 டிசம்பர் முடிய வருட வாரியாக சாலைகளுக்காக தார் போடவும் மேம்பாடு செய்யவும் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

சென்னை மாநகராட்சியில் 1976 முதல் 1978 டிசம்பர் முடிய வருட வாரியாக சாலைகள் போடவும் மேம்பாடு செய்யவும் செலவழிக்கப்பட்ட தொகை பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1976–77 | .. | ரூ. 182‘52 இலட்சங்கள். |
| 1977–78 | .. | ரூ. 229‘42 இலட்சங்கள். |
| 1978–79 டிசம்பர் 1978 முடிய. | | ரூ. 164‘90 இலட்சங்கள். |

*வினா எண். 31—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் மழை வெள்ளத்தால் சென்னை நகரில் பாதிக்கப்பட்ட சாலைகளைப் புதுப்பிக்க அரசு மாநகராட்சிக்கு தனி மானியம் வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) சென்னை நகரில் பாதிக்கப்பட்ட சாலைகளை புதுப்பிக்க மாநகராட்சிக்கு ரூபாய் 1 கோடி கடனாகவும் ரூ. 1 கோடி மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, முதல் கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கும்பொழுது சொன்னார்கள். 1976 முதல் 1978 வரை சாலைகள் அமைக்கப்பட்டதற்கு கொடுக்கப்பட்ட மானியம் எவ்வளவு ? அதிலே மாநகராட்சி

செலவு செய்தது எவ்வளவு? அரசு மானியம் கொடுக்கிற போது இன்ன இன்ன சாலைகளைத்தான் புதுப்பிக்கவேண்டுமென்ற நிபந்தனையின் பேரில்தான் மானியம் கொடுக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் முதலிலே வெள்ள நிவாரணத்தின்கீழ் சாலை வேலைகள், சென்னை நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சாலை அபிவிருத்தி, சாலைகள் பழுதுபார்த்தல் என்ற இந்த மூன்று இனங்களிலும் சேர்த்து மொத்தத் தொகையைத்தான் நான் குறிப்பிட்டேன். அரசு மானியம் கொடுக்கிறபோது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளுக்கு என்று கொடுக்கிறபோது அதற்குத் தான் அதைப் பயன்படுத்த வேண்டுமென்று கருதுகிறது.

திரு. அ. செல்வராசன்: தலைவர் அவர்களே, சென்னையிலே போடுகின்ற சாலைகள் அத்தனையும் பழைய சாலைகளையே மேலும் 3, 4 அங்கும் உயர்த்திப் போடுகிறார்கள் இந்த நிலை நீடித்துக்கொண்டே போகுமானால் சென்னையில் உள்ள வீடுகள் தாழ்ந்துபோய் மழைத் தண்ணீர் வீடுகளுக்குள்ளே போகக்கூடிய நிலைமை ஏற்படும். நான் இதைப்பற்றி மாநகராட்சியில் உள்ள எஞ்சினீயர், மாநகராட்சி ஆணையர் இவர்களிடம் எடுத்துச்சொன்னபோது தக்க பதிலை அவர்கள் சொல்லமுடியாமல் பணம் இல்லை என்ற ஒரே காரணத்தைத் தான் சொல்கிறார்கள். இந்த நிலைமை நீடித்துக்கொண்டே போனால் சில ஆண்டுகளுக்குள்ளாக சென்னை நகரத்திலே உள்ள வீடுகள் தாழ்ந்துபோய், மழைத் தண்ணீர் வீடுகளுக்குள்ளே போய் விடும். ஆகவே பழைய முறையிலேயே 3, 4 அங்குலம் சாலையை நோண்டிவிட்டு அதற்குப் பின்னால் புதிய சாலையைப் போடுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இப்போது பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாநகராட்சி அதைச் செய்யும் என்று நினைக்கிறேன்.

திரு. அ. செல்வராசன்: தலைவர் அவர்களே, பணத்தைப் பற்றியல்ல நான் சொல்வது: போடுகின்ற முறையிலே குறை இருக்கிறது. அந்தக் குறையை நீக்கவேண்டுமென்று தான் சொல்கிறேன் இப்போதுள்ள சாலைகளின் மேலேயே 3, 4 அங்குலம் உயர்த்துகிறார்கள், அப்படிச் செய்யாமல் பழைய முறைப்படி செய்ய வேண்டுமென்று அதிகாரிகளுக்கு அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை நிச்சயமாக அரசு மாநகராட்சிக்கு அறிவிக்கும்.

1980 பிப்ரவரி 4]

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியமானது மழை பெய்தபிறகு காலதாமதமாக வழங்கப்படுகிறது. அதன் காரணமாக, புதுப்பிக்கப்பட வேண்டிய சாலைகள் மேலும் அதிகமாகப் பழுதடைந்து, புதுப்பிக்க திட்டமிடப்பட்ட செலவைவிட அதிகமாகச் செலவாகிறது. எனவே, காலதாமதம் இல்லாமல் இதற்கு முன்னாலே இந்த மானியத்தை வழங்கலாமே, அவ்வாறு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அதைப்போல, சென்னையில் பஸ் போகும் சாலைகள் மட்டும் பழுதுபார்க்கப்பட்டு, உள்பகுதி சாலைகள் புதுப்பிக்கப்படவில்லை. ஆகவே, அந்தச் சாலைகளும் இந்தத் திட்டத்தின்கீழ் புதுப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இப்பொழுது வழங்கப்பட்டதிலே தாமதம் எதுவுமில்லை. இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற பணத்தில் பெரிய சாலைகளை மேம்படுத்துவதுடன் நெடுஞ்சாலையோடு இணையும் சிறிய சாலைகள், சேரிப் பகுதிகளுக்கு மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளுக்குச் செல்லும் சாலைகள் ஆகியவைகளையும் சீர்படுத்த வேண்டுமென்றுதான் அரசு கருத்து கூறியிருக்கிறது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, சென்னையில் இப்பொழுது வெள்ளத்தால் ஏராளமான பாதாளச் சாக்கடைகள் மண் தூர்ந்து அடைக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் சிறு மழை பெய்தாலும் ஆங்காங்கு தண்ணீர் தேங்கி, சரிவர தண்ணீர் போகாமல் இருக்கிறது. அவைகளை நீக்க சர்க்கார் ஏதேனும் பணம் அளித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதோடு, சென்னையிலுள்ள குடிசைமாற்று வாரியம், வீட்டுவசதி வாரியம் உள்ளடங்கிய குடிசைப் பகுதி மக்கள் இருக்கும் பகுதிகளில் உள்ள ரோடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் புதுப்பிக்க அரசு ஏதேனும் மானியம் அளித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, வெள்ளத்தால் ஏற்பட்ட அத்தனை சேதங்களையும் ஈடுகட்ட இந்தப் பணம் பயன்படுத்தப்பட முடியாது. சாலை மேம்பாட்டுக்காகத்தான் இந்தப் பணம்.

திரு. தீ. சு. நல்லதம்பி : பேரவைத் தலைவரவர்களே, இன்று அரசு மானியம் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப் பயன்படுத்துவதற்கு பஸ் ரோடுகள் என்று சொல்வதற்கு காண்ட்ராக்ட்க்கு விடப்படுகிறது. குறுக்குச் சாலை, அதாவது தெருவிலே இருக்கிற குறுக்கு ரோடுகள் இருக்கின்றனவே. அவைகளைச் செப்பனிடுவதற்கு மாநகராட்சியினி

டத்தில் போதிய தொழிலாளர்கள் இல்லை என்பதை அரசு அறியுமா? ஒவ்வொரு வட்டத்திற்கும் குறைந்தது 10 அல்லது 15 தொழிலாளர்களாவது தேவை. ஆனால் இன்று ஒன்றிரண்டு பேர்கள்தான் இருக்கிறார்கள். சாலை அமைக்க வேண்டுமென்று அரசிடத்தில் உத்தரவை எதிர்பார்த்து பல முறை விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா, ஏன் இந்த சிகப்புநாடா முறை இருக்கிறது? உடனடியாக இங்கே தொழிலாளர்களை நியமிப்பதில் என்ன சிக்கல் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அப்படி வேண்டுகோள் வந்திருந்தால் அதை அரசு கவனிக்கும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவரவர்களே, சென்ற ஆண்டு இறுதியில் மழையின் காரணமாக சென்னை நகரம் எப்படி பாதித்ததோ அதேபோல கோவை நகரமும் மதுரை நகரமும் பாதிக்கப்பட்டன. கோவை, மதுரை நகரங்களில் ......(மணியடிக்கப்பெற்றது.)

திரு. சென்னை மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில், பட்டியலில், மழையினால் பாதிக்கப்பட்ட சாலைகளை பட்டியலைக் கொடுத்து செய்யச் சொல்கிறோம் என்று சொன்னார்கள். அப்படிக் கொடுக்கப்படும் பட்டியலில் நெடுஞ்சாலைகள்தான் அடங்குகின்றன, உட்சாலைகள் அடங்கவில்லை என்பதுதான் எனக்குத் தெரிந்த உண்மை. இரண்டாவதாக, அண்மையில் உள்சாலைகளுக்கும் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தகவல். அதோடு, மாநகராட்சி இவ்வளவு காலம் நிர்வாகத்தில் சாலைகளைச் செப்பனிடுவதற்காக அந்த மாநகராட்சியின் அதிகாரிகளை வைத்துச் செப்பனிட்டார்கள். இப்பொழுது ஹைவேஸ் அதிகாரி அதைப் பரிசீலித்து அவர் ஒப்புதல் அளித்த பிறகு இதைச் செய்யவேண்டுமென்ற நிலை இருப்பதால் வேலைகள் தாமதப்படுகின்றன. மாநகராட்சியில் இருக்கின்ற அதிகாரிகள் திறமையற்றவர்கள் என்று இந்த அரசு கருதுகிறதா?....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாநகராட்சி அனுபவத்தை உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். இது கேள்விநேரம் எனவே, உறுப்பினர் கேட்பது கேள்வியாக இருக்கட்டும்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்; கேள்வியாகத்தான் கேட்கிறேன். மாநகராட்சி அதிகாரிகளுடைய திறமைக்கு இது சோதனைக் கட்டம் போல் அவர்களை அவமானப்படுத்து

1980 பிப்ரவரி 4]

வதைப்போல இருப்பதால், இந்த முறை ரத்து செய்யப்பட்டு உடனடியாக வேலைகளைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே வேலைகளைத் துரிதப்படுத்த எந்தெந்த நடவடிக்கைகள் தேவை யோ அதை அரசு எடுக்கும்.

## வேலைக்கான உணவுத் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட மானியம்.

*வினா எண். 32.— திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:—

தமிழ்நாட்டிற்கு 1979–80ம் ஆண்டிற்கு வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் மைய அரசு அளித்த மானியம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மான்யமாக பணம் வழங்கவில்லை. ஆனால் 47,000 டன் அரிசியை மானிய மாக 1979–80-ம் ஆண்டுக்கு இதுவரை ஒதுக்கியிருக்கிறது.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் தலைவரவர்களே, வேலைக்கு உணவுத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை அவ்வ ளவும் செலவழிக்கப்பட்டிருக்கிறதா? இப்பொழுது செலவழிக்கப் பட்டிருக்கிற அரிசியில் பழுப்பு ஏறியிருப்பதால் பல ஒன்றியங் களில் அரிசி திருப்பி அனுப்பப்பட்டு வேலைக்குத் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். அப்படியிருந்தால் புதிய அரிசியை இந்த ஆண்டு முடிவதற்குள்ளாக அந்தத் தலைப்பில் ஒதுக்கியதைச் செலவு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இதுவரையில் 11.33 இலட்சம் தொழிலாளர்கள் வேலைவாய்ப் புக்களைப் பெற்றிருக்கிறார்கள். ஊதியமாக ரூ. 3,18,69,000 மதிப்புள்ள 21,246 டன் அரிசி இதுவரை வழங்கப்பட்டிருக் கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுவது போன்ற புகார்கள் எதுவும் வரவில்லை.